


# 01.05.2026 செய்திகள்

## பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் கருக்கலைப்பு செய்ய சட்டத் திருத்தம்

» மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் யோசனை

- பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு கருவுற்ற, சிறுமியின் கருவைக் கலைப்பது தொடர்பான வழக்கை கடந்த 24-ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.வி. நாகரத்னா, உஜ்ஜல் புயான் அமர்வு, சுமார் 30 வார கால கருவைக் கலைக்க 15 வயது சிறுமிக்கு அனுமதியளித்து உத்தரவிட்டது.
- பாலியல் வன்கொடுமை மூலம் வயிற்றில் உருவாகும் கருவைக் கலைக்க குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயிக்க முடியாது. இந்த வழக்கு சிறுமி தொடர்புடையது. அவர் தற்போது கல்வி பயில வேண்டும், ஆனால் நாம் (எய்ம்ஸ்) அவர் தாயாக இருக்க வேண்டும் என நினைக்கிறோம். பாதிக்கப்பட்ட சிறுமியின் வேதனையை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்.
- பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அந்த சம்பவம் வாழ்நாள் முழுவதும் வடுவாக இருக்கும். கருவைக் கலைக்க அனுமதிக்கவில்லையேல், அது பிரச்னையாகும். குழந்தையை சுமக்கும் தாய்க்கு எந்தவித உடல்நல பிரச்னையும் இல்லையேல், கருவைக் கலைக்கலாம்.
- கருவைக் கலைப்பது என்பது பாதிக்கப்பட்ட சிறுமி, அவரது பெற்றோரின் முடிவைச் சார்ந்தது. இந்த விவகாரத்தில் அவர்களுக்கு எய்ம்ஸ் உதவ முடியும். இது குறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோருக்கு எய்ம்ஸ் தனது ஆலோசனையை வழங்க வேண்டும். அதனடிப்படையில், கருவைக் கலைப்பது குறித்து அந்தச் சிறுமி முடிவெடுக்கட்டும்.

SURESH

## மீன் உற்பத்தி : இந்திய அளவில் தமிழகம் முதலிடம்

- மீன் உற்பத்தி இந்திய அளவில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளதாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில்-மத்திய கடல்சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (ஐசிஏஆர்-சிஎம்எஃப்ஆர்ஐ)
- 6.85 லட்சம் டன் மீன் உற்பத்தியை மேற்கொண்டு குஜராத்தை பின்னுக்குத் தள்ளி தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.
- இது குறித்து ஐசிஏஆர்-சிஎம்எஃப்ஆர்ஐ வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது : 2025-ஆம் ஆண்டில் இந்தி யாவில் கடல்சார் மீன் உற்பத்தி 35.7 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. 2024-ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் கடல்சார் மீன் உற்பத்தி 3 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.
- நாட்டிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டில் 6.85 லட்சம் டன் கடல்சார் மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பருவநிலை, நீட்டிக்கப்பட்ட மீன் பிடித்தடைக்காலம் மற்றும் புயல் போன்ற காரணங்களால் 15 சதவீத வீழ்ச்சியுடன் குஜராத் இரண்டாமிடத்துக்கு சென்றது.
- 6.24 லட்சம் டன் மீன் உற்பத்தியுடன் 2 சதவீத வளர்ச்சியை பதிவு செய்து கேரளம் மூன்றாமிடத்தில் உள்ளது. இது தவிர பெரிய ம ாநிலங்களைப் பொருத்தவரை கர்நாடகம் 44 சதவீத வளர்ச்சியையும் மகாராஷ்டிரம் 18 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.
- 2025-இல் அதிகம் பிடிக்கப்பட்ட மீன் வளமாக 2.70 லட்சம் டன்களுடன் கானாங்கெளுத்தி மீன் முதலிடத்திலும், 2.57 லட்சம் டன்களுடன் தலைக்காலிகள் இரண்டாமிடத்திலும், 2.53 லட்சம் டன்களுடன் எண்ணெய் மத்தி மீன் மூன்றாமிடத்திலும் உள்ளன.
- நாட்டின் மொத்த கடல்சார் உற்பத்தியில் கேரளத்தின் பங்கு 17 சதவீதமாக உள்ளது.
- நாடு முழுவதும் உள்ள மீன்பிடி துறைமுகங்களில் மீன்பிடித்தொழிலின் மொத்த பொருளாதார மதிப்பு ரூ. 69.254 கோடியாக உள்ளது. இது 2024 -ஐ விட 10.45 சதவீத வளர்ச்சியாகும். சந்தையில் மீன்கள் சில்லறை விற்பனை மதிப்பு ரூ. 97.702 கோடியாக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர்களின் உரிமைகள் தொடரட்டும் !

- '1880 களில் புதிய இயந்திரங்கள், திறமையான தொழிலாளர்களின் வேலைகளைக்கூடக் காலி செய்தன. சிகாகோவில் உபரித் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றது. நீங்கள் சம்பள வெட்டை அல்லது அதிக வேலை நேரத்தை ஒப்புக்கொள்ள மறுத்தால், உங்கள் வேலையைப் பார்க்க எப்போதும் யாரோ ஒருவர் தயாராக இருப்பார்' – அமெரிக்க அறிஞர் வில்லியம் அடல்மன் தனது 'மே தின தியாகிகள் வரலாறு' புத்தகத்தில் கூறியிருக்கும் வார்த்தைகள் இவை.

» மே தினமும் ஹேமார்க்கெட்டும்

- 1886 மே 1 முதல் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் திரண்டு 'எட்டு மணி நேரம் வேலை, எட்டு மணி நேரம் ஓய்வு, எட்டு மணி நேரம் சமூகப் பணி' என்கிற முழக்கத்தை முன்வைத்துப் போராடினர். மே 4இல் ஹேமார்க்கெட்டில் (Haymarket) போராட்டம் நடந்தது.
- ஹேமார்க்கெட்டில் தொழிலாளர்கள் நடத்திய கூட்டத்தில், சிகாகோ நகர மேயர் ஹாரிசன், நகரக் காவல் துறை அதிகாரி கேப்டன் போன்ஃபீல்டு ஆகியோர் பங்கெடுத்ததாக வில்லியம் அடல்மன் குறிப்பிட்டுள்ளார். உரை முடியும் தறுவாயில், மேயர் நகரக் காவல் அதிகாரியிடம், 'அசம்பாவிதம் எதுவும் இல்லை, இனி நடக்கும் சூழல் தெரியவில்லை. எனவே நான் புறப்படுகிறேன்; காவலர்களையும் கலைந்து செல்லச் சொல்லுங்கள்' என்று சொல்லியிருக்கிறார். ஆனால், கூட்டம் கலைந்துசென்றபோது, திடீரெனக் குண்டுகள் வெடித்துப் பெரும் பதற்றம் உருவானது.
- இப்போராட்டத்தில் பங்கெடுத்த தலைவர்கள் மீதான நீதிமன்ற விசாரணை, 1886 ஜுன் 21 தொடங்கி விரைவாக நடந்தது. 1887 நவம்பர் 11இல் மரண தண்டனை என நாள் குறிக்கப்பட்டது. நீதிபதி கேரி (Joseph E. Gary) கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

» கண்டனக் குரல் :

- சட்டரீதியில் ரஷ்யா முதலில் 8 மணி நேர வேலை எனச் சட்டம் இயற்றியது. பின்னர், பல நாடுகள் அதைப் பின்பற்றின.
- அதே ரஷ்யா பின்னர் 6 மணி நேரம் என்பதை வேலை நேரமாக நிர்ணயித்தது. அதைப் பின்பற்றி ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் அமலாக்கிவருகின்றன. பிரான்ஸில்தான் உலகில் மிகக் குறைவான வேலை நேரம்; ஆம், வாரம் 35 மணி நேரம்தான் அங்கு!

» ஏஐ இயந்திரங்கள்

- இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பரவலாகப் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது. 1880களில் அன்றைய தொழில்நுட்பங்களின் வரவு தொழிலாளர்களை வேலையிலிருந்து வெளியேற்றியதைப் போல ஏஐ வரவால் பணிவாய்ப்புகள் பறிபோகும் சூழல் தற்போது உருவாகியிருக்கிறது.
- அதேபோல் தலைநகர் டெல்லி, அதைச் சுற்றியுள்ள தொழில் நகரங்களில் அண்மையில் தொழிலாளர்கள் திரண்டு போராட்டம் நடத்தியுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அன்றைய சிகாகோ நகரப் போராட்டம் போன்றதொரு நிலையும் கோரிக்கைகளும் இந்தப் போராட்டங்களிலும் இருந்துள்ளன.
- தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், 1923இல் சிங்காரவேலர் சென்னை மாநகரில் கொடி ஏற்றி மே தினத்தைக் கடைப்பிடித்த வரலாற்றுப் பெருமை உண்டு. இந்தப் பெருமை நீடிக்க வேண்டும்!

### செபியின் 'பார்வா'

» முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் 6 நன்மைகள்

- **ஒப்பீடு செய்யும் வசதி:** வெவ்வேறு ஆலோசகர்களின் நிஜமான திறனை ஒரே அளவு கோலில் ஒப்பிட்டு பார்த்து, சிறந்த சேவையை தேர்வு செய்யலாம்.
- **போலி தகவலுக்கு முற்றுப்புள்ளி:** மிகைப்படுத்தப்பட்ட லாப கணக்குகளை காட்டி, முதலீட்டாளர்களை ஏமாற்றும் மோசடிகள் குறையும்.
- **ரிஸ்க் புரிதல்:** லாபம் மட்டுமல்லாது, அந்த லாபத்தை பெற எவ்வளவு ரிஸ்க் எடுக்கப்பட்டது என்ற உண்மையும் வெளிப்படையாக தெரியும்.
- **சமமான களம்:** பெரிய நிறுவனங்கள் முதல் சிறிய ஆலோசகர்கள் வரை அனைவரும் ஒரே விதிமுறைக்கு கீழ் வருவதால் வெளிப்படைத்தன்மை கூடும்.
- **தெளிவான முடிவு எடுக்கும் திறன்:** சரிபார்க்கப்பட்ட தரவுகள், கட்டாய எச்சரிக்கை குறிப்புகள் ஆகியவை இணைந்து, உண்மையான எதிர்பார்ப்புகளுடன் முதலீடு செய்ய உதவுகின்றன.
- **ஆதாரத்துடன் புகார்:** சரிபார்க்கப்பட்ட தரவுகள் இருப்பதால், ஏதேனும் குளறுபடிகள் நடந்தால், ஆதாரத்துடன் புகார் அளிக்க முடியும்.